# திராவிட சினிமா

24

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

■ வீ.மா.ச.சுபகுணராஜன்



படங்கள் உதவி : ஞானம்



# ‘பூமாலை’ காட்டும் திராவிடச் சிந்தனை!

1965-ஆம் ஆண்டு மேகலா பிக்சர்ஸ் சார்பில், முரசொலி மாறன் அவர்களின் தயாரிப்பாக வெளிவந்தது ‘பூமாலை’ திரைப்படம்.

கலைஞரின் கதை, திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படத்தை, சுதர்சனம் இசையில், அமிர்தம் அவர்களின் ஒளிப்பதிவில், ப.நீலகண்டன் இயக்கியிருந்தார். எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, அஞ்சலிதேவி, எஸ்.ஏ.அசோகன், நாகேஷ், மனோ ரமா மற்றும் பலர் நடித்திருந்தனர்.

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி ஒரு குழந்தையையும் ஈன்றெடுக்க நேரும் இளம்பெண்ணின் கதை. இந்த ஒற்றை வரிக்கதையை கலைஞரின் திரைக்கதை கையாண்டிருக்கும் விதம், திரைப் படத்தைச் சமூக மாற்றத்துக்கான கருவியாகக் கையாள எண்ணுவோருக்கு ஒரு கையேடு.

## பூமாலையின் முன்னிருந்த வழிகள்

ஒரு பெருமழை பெய்யும் வெளிச்சமற்ற இரவில், முகமறியவியலாத ஆண் மனித மிருகத்தால் பாலியல் வல்லுறவுக்கு ஆளான பெண்ணின் கதையை அந்தப் புள்ளியிலிருந்து நகர்த்தும் வழிகளை யோசித்துப் பாருங்கள். அவள் முன் இருக்கும் வழிகளில் முதலாவது உயிரை மாய்த்துக் கொள்வது.

அதைவிடுத்து வீடு திரும்பி, தான் கர்ப்ப மடைந்திருப்பதும் தெரிய வந்தால், அவளுக்கான வாய்ப்பு என்ன? அவளது கையறு நிலையைக் கருதாது அவதூறும் பழியும் பேசும் குடும்ப உறுப்பினர்கள் அவளை எப்படி எதிர்கொள்வார்கள்?

பூமாலை மீது அன்பும், மாறாத நம்பிக்கையும் கொண்ட அப்பாவும் அண்ணனும் அவளது அவலநிலையை முற்றாகப் புரிந்து கொள்கிறார்கள். அப்பா, ‘அறியாமல் நடந்ததற்கு நீ பொறுப்பல்ல, உயிர்துறப்பது தவறு. நீ வாழ்ந்துதான் ஆக வேண்டுமென’ உறுதியாகப் பேசி, அவளது அண்ணனிடம் அதற்கான பொறுப்பையும் கொடுத்துவிட்டு உயிர்விடுகிறார்.

குழந்தைப் பிறப்பை ரகசியமாக்கி, அதையும் கைவிட்டு தங்கையை வாழ வைக்க முயல்கிறான் அண்ணன். எதிர்பாராத திருமண உறவில் ஈடுபட முடியாமல் தவிப்பவளிடம், குழந்தை மீள்கிறது.

இந்தத் திருப்பங்களில், அவளது வாழ்வின் அசாதாரண நிலையறிந்து, அவளுக்கு உறுதுணையாக இருக்கிறார் கணவனின் விதவை அக்கா. ஆனால், ஊரார் அவதூறு பழியை அவள் மீது சுமத்துகின்றனர். அக்காவின் உயிர்த் தியாகத்தில் முடிச்சுகள் அவிழ்கின்றன.

## கலைஞர் காட்டிய நவீனம்

காலத்துக்கேற்றாற் போல தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறன் கொண்டவர் கலைஞர். ஆனால், தகவமைத்துக் கொள்ளுவது கருத்து சமரசத்தில் அல்ல. மாறாக, தனது சீர்திருத்தச் சிந்தனைகளைச் சொல்லும் முறையை மாற்றுவது. அது அடிப்படையாக ஒரு படைப்பாளியின் பண்புதான் எனக் கடந்துவிட முடியாது.

தங்களது கொள்கை நிலைப்பாடுகளில் தடு மாறித் தடம் புரண்டவர்கள் ஏராளம். கேட்டால், இந்து தத்துவ விசாரங்களின் ஆழமறியாமல் ஒருநாளில் செய்த பிழை எனக் கடப்பதோடு, பகுத்தறிவு- சுயமரியாதைச் சிந்தனைகளைப் பகடி பேசி, பிழைத்துத் தொலைப்பார்கள். எவ்வளவு வெளிப்படையாகச் சொன்னாலும், தன் பிற்போக்குச் சிந்தனைகளின் சாராம்சத்தைக் கைவிட முடியாது என அகம்பாவம் பேசிய ‘மௌனி’களே இங்குத் தமிழ் நவீனத்தின் உன்னத அடையாளங்கள் ஆயினர்.

அன்றும் இன்றும் பார்ப்பனிய மனோபாவத்தின் பிடியிலிருந்து விலக முடியாமல் இருக்கும் குறுங்குழுவினர் ‘நவீனத்தை’ தேன் தடவிய வார்த்தைகளில் மொழியப்பட்ட ’உன்னத இலக்கிய’ பம்மாத்துகளில் பாரம்பரியம் / மரபு எனும் வாதங்களில் முன் வைக்கின்றனர்.

அவர்களின் பழைமையான முடைநாற்றத்தின் கொண்டாட்டத்தை ‘கலை கலைக்காகவே‘ எனும் வாதத்தில் வளைத்தனர். கலையின் அரசி யல் இயக்க விசை அறியாதவர்கள் ஏமாறலாம், ஆனால் ‘அரசியலற்ற கலை’ என்ற ஒன்று ஒரு போதும் இருக்கவியலாது என்ற புரிதல் கொண்டவரிடம் இந்த வாதம் காலத்தில் தூளாகிப் போனது. அவர்களின் ‘கலை உன்னதம்’ சனாதனக் கோடாரிகளுக்குச் சாணை பிடித்த வேலையென இப்போது அம்பலமாகிப் போனது.

## கலை கலைக்காகத்தானா?

திரைப்படத்திலும் நேரடியாகவும் ‘கலை கலைக்காக’ என்ற அபத்தம் பேசப்படுகிறது. சுந்தரம் சொல்கி றான், ‘கலை கலைக்காக மட்டும்தானாம்’ என்கிறார்கள் சில ‘பெரியவர்கள்’ என்று. அக்கா பதிலிறுக்கிறாள், ‘அது எப்படி இருக்க முடியும். விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்’ என்று.

> **விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்!**

கலை கலைக்காக வாதத்தின் அடிப்படை ‘கலை’ அதன் உன்னதத்தின் உச்சியில் ’வாசகனை’ உச்சரிக்கப்படாத வார்த்தைகளின் வழி உரையாடல் நிகழ்த்தி, அவனை உச்சாணியில் ஏற்றி விடும் என்பதே. உச்சாணியில் ஏறியவன் வாய் திறந்து, ‘உன்னதச் சனாதனமும்’, ‘சுயசாதி பெருமிதமும்‘ பேசும் போதுதான் உரையாடல் வழியாகக் கடத்தப்பட்ட ‘உன்னதம்’ அம்பலமாகும்.

## ஆணின் தவறு... பெண்ணுக்குத் தண்டனை...

சுந்தரத்துக்கு ரவி என்றொரு நண்பன். பகுத்தறி வாளன், கலை, இலக்கியம், பண்பாடு என வாழ்பவன். ‘உன்னையே நீ எண்ணிப் பார்‘ என நூல் எழுதி ‘அக்காவுக்கு’ காணிக்கையாக்குபவன்.

திரைக்கதையின் கவனம் முற்றாக அந்தப் பெண்ணின் இருப்பு மீதே. அவளின் வலியும் வேதனையும், கிடுக்கியில் மாட்டிக் கொண்ட நிலையுமே பேசப்படுகிறது. அதிலும் தாய்மைப் பேறின் பிடியிலிருந்து மீள முடியாமலும், கன்னி யான புதிய காதல் மனைவி என்ற ‘பாத்திரத்தை’ ஏற்க முடியாமலும் தவிக்கும் போராட்டத்தை அற்புதமாகச் சித்தரித்திருக்கிறார் கலைஞர்.

அதன் தொடர்ச்சியாக ஒரு ஆதரவற்ற குழந்தையின் ‘தாயாகும்‘ அக்காவின் மீது அள்ளி வீசப்படும் மனமலங்களின் குவியலில் அவள் மூழ்குவதும் காட்சியாகிறது. தன் குற்றத்தைப் பகுத்தறிவாள நண்பனிடம் பேசி அதிலிருந்து தன்னை விடுவித்தும் கொள்கிறான் ஆண்.

தான் இழைத்த மாபெரும் கொலைபாதகத்திலிருந்து ‘விடுதலை‘ பெற்று விடும் ஆணின் வாய்ப்பு, எந்தக் குற்றமும் செய்யாத பெண்களுக்கு அறவே மறுக்கப்படுகிறது. ’தவறு செய்வது ஆண், தண்டனை அனுபவிப்பது பெண்’ என்கிறது கலைஞர் வரிகள்.

## அழுவதா திராவிடச் சிந்தனை?

இந்த ஆண் உலகத்தின் அதிகாரத்தை அப்பட்டமாகத் தோலுரிப்பதை, இதைவிட கலைநயமாக எப்படிச் சொல்லி விடுவார்கள். வெகு மக்கள் புரிதலைக் கோரும் திரைப்படம், அதன் மிகச் சிறந்த கருவியான பாடல் வழி உன்னதத்தைக் கடத்தும் விதம் பாருங்கள்...

“பெண்ணே உன் கதி இது தானா உன் பெண்மை ஆண்மை க்குப் பலிதானா உலகே உனக்குச் சுமைதானா உன் உடலே உனக்குப் பகைதானா...”

‘பெண்ணின் உடலே பெண்ணிற்குப் பகைதானா’ என்ற கவிஞர் மாயவநாதனின் வரிகளில், காண முடியாத கலை உன்னதம் என்னவாக இருக்க முடியும்? அதற்காக இந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தும் செயலற்றவர்கள் இல்லை.

இறுதியில், கணவன், மனைவியையும், அக்காவை யும் அவதூறுக்குள்ளாக்கிய கொடூரன் தானே என உணர்ந்து மனைவியிடம், குற்றவுணர்ச்சியின் அவமானத்துடன் கேட்கிறான். “உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய கொடூரன் உன் முன்னால் வந்தால் என்ன செய்வாய்” என்று.

பெண் வெடித்துக் குமுறுகிறாள், ‘அந்த மிருகத்தை இரண்டாகக் கிழித்து எறிந்து விடுவேன்‘ என்று. இதுதான் திராவிடச் சிந்தனை. பெண்களைக் கண்ணீர் சிந்துவோராகக் காட்டி இரக்கம் தேடும் உன்னதங்கள் அல்ல அவை. மாறாக எழுந்து நின்று போராடு, ஆணுக்குச் சமமாக நில் என்பதே..!

...படம் விரியும்

## டிஜிட்டலில் 50 ஆண்டுச் ‘செம்மலர்’!




திராவிட இயக்கம் போலவே, பகுத்தறிவு மற்றும் சமத்துவச் சிந்தனை களை முன்னெடுத்துச் சென்றதில் பொதுவுடைமை இயக்க இதழ்களுக்கும் பங்குண்டு. அவற்றில் முக்கியமான இதழ், சி.பி.எம். கட்சியின் ‘செம்மலர்’ மாத இதழ்.

கடந்த 50 ஆண்டுகளாக அச்சு இதழாக வந்துகொண்டிருந்தது ‘செம்மலர்’. அந்த இதழ்கள் அனைத்தும் தற்போது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, அனைவரும் எளிதில் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்தக் கூடிய வகையில் தெற்காசிய திறந்த மின்னணு ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் பணியை சென்னையில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மேற்கொண்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கருவூலம் இந்தப் பணிகளை ஒருங்கிணைத்தது. 1970-ஆம் ஆண்டு மே முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 587 செம்மலர் இதழ்கள் கிடைக்கும்.

https://bitly.ws/VeF7

## :ப்ளாஷ்பேக்



## திருவாரூர் சூட்டிய அறிவுக்கொடி!



சௌந்தரராஜன்

1965-இல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதுடன், மொழிப் பற்றுக் கொண்ட ஆசிரியராகவும் எனது பணியை 2006-ஆம் ஆண்டு வரை செய்தேன். 1979-ஆம் ஆண்டு திருவாரூருக்குப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது மயிலாடுதுறையிலிருந்து, 11 மாதமே ஆன என் மகளை அழைத்துக் கொண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றேன். அன்னை மணியம்மை அவர்களின் நூற்றாண்டும் அந்த சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைவர் கலைஞர்தான் என் மகளுக்குப் பெயர் வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். 1.09.1979 அன்று என் மகளுக்கு ‘அறிவுக்கொடி’ என்று பெயர் வைத்தார். ஒரு தமிழாசிரியனாகவும் கலைஞரின் தொண்டனாகவும் பெருமையாக உணர்ந்த தருணம் அது.

**-பா.சௌந்தரராஜன், கிளைச்செயலாளர், குளிச்சார், மயிலாடுதுறை மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### விவசாயத்துக்கு டிராக்டர்

**1970-ஆம் ஆண்டு கண் சிகிச்சைக்காக லண்டன் சென்றார் கலைஞர். அங்கு சென்ற இடத்திலும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக் காகப் பேச்சுவார்த்தைகளில் ஈடு பட்டார். ஸ்டாண்டர்டு தொழிற்சாலை, டிராக்டர் தொழிற்சாலை, பெட்ரோ கெமிக்கல் தொழில்கள் திறப்பதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபட்டார். பெர்கூசன் டிராக்டர் தொழிற்சாலையைப் பார்வை யிடச் சென்றபோது, அவருக்குப் பரிசாக வழங்கப்பட்ட டிராக்டரை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்பாக அளித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 248




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.